மோட்டார் வாகனங்கள் விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத் தீர்ப்பாயம், சென்னை

(I சிறப்பு நீதிமன்றம், சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை)

முன்னிலை : திருமதி. கே. சுஜாதா, பி.ஏ., பி.எல்.,

I சிறப்பு நீதிபதி, சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ஆம் நாள் புதன்கிழமை

மோ.வா.வி.இ.கோ.தீ. மனு எண். 4749/2022

(CNR No. TNCH09-010840-2022)

1. C.Raja
   S/o. Late Chinnakannu
   C-29, Madeena Colony,
   Tada Khandrika, Nellore,
   Andhra Pradesh - 524 401.

2. C.Selvam
   S/o. Late Chinnakannu
   No.292, Egathamman Koil Street,
   Madathukuppam, Raman Kovil,
   Senji, Tiruvallur - 631 203.

3. Puduru Lakshmi
   D/o. Late Chinnakannu
   MPR School Backside,
   Tada Khandrika, Nellore,
   Andhra Pradesh - 524 401. ......மனுதாரர்கள்

//எதிராக//

1. Rani David
   W/o. Soloman Thomas,
   NO.68/2, Gowdiya Mutt Road,
   Royapettah, Chennai - 600 014.

2. The New India Assurance Co. Ltd.,
   No.232, NSC Bose Road,
   Bombay Mutual Building, VI Floor,
   Chennai - 600 001. ...... எதிர்மனுதாரர்கள்

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:26 +0530

இம்மனு 15.09.2025 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞாகள் திரு/திருமதி. K.Naveen Kumar மற்றும் K.Amudhavalli அவர்களும், 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.E.Karunakaran அவர்களும் ஆஜராகி, 1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

1. 1988 வருட மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 166 மற்றும் மோட்டார் வாகன விதி 3ன் கீழ் இம்மனுவானது மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன Chinnakannu என்பவரின் இறப்பிற்கு ரூ.15,00,000/- இழப்பீடு கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

2. மனுவின் சுருக்கம்

இந்த மனுவில் காலமானவர் கடந்த 20.03.2015 ஆம் தேதி சுமார் 21.30 மணியளவில் NH-16 நெடுஞ்சாலை, Tadakandriga Village, மார்கெட் சென்டர் அருகில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சாலையை கடந்து சென்ற போது, அந்த நேரத்தில் TN 06 D 7551 என்ற பதிவு எண் கொண்ட காரின் ஓட்டுநர் காரை Sullurpet-ல் இருந்து சென்னை நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று காலமானவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் காலமானவருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் பின்னர் 29.08.2016 அன்று இறந்துவிட்டார். 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தில் Chinnakannu என்பவர் காலமாகி விட்டதினால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.15,00,000/- வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:31 +0530

3. 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்படும் எதிருரை மற்றும் கூடுதல் எதிருரையின் சுருக்கம் :-

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை. இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்களின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை. மனுதாரர்கள் சொல்வது போல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், காலமானவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அந்த வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும், அவர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டுள்ளார் என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பிரைவேட் கார் பேக்கேஜ் பாலிசி எடுத்திருப்பதால் விபத்தில் காலமான நபருக்கு இழப்பீடு வழங்க இயலாது என்று கோரியுள்ளார்.

4.இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,

1. இந்த விபத்தானது TN 06 D 7551 என்ற பதிவு எண் கொண்ட கார் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதா? இல்லையா?
2. இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரா?
3. விபத்தில் காலமான நபர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளாரா?
4. மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் எவ்வளவு கிடைக்கக்கூடியது?

5. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2ம்

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:34 +0530

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. பிரச்சனை – 1க்கான தீர்வு:-

i. மனுதாராகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இந்த மனுவில் காலமானவர் கடந்த 20.03.2015 ஆம் தேதி சுமார் 21.30 மணியளவில் NH-16 நெடுஞ்சாலை, Tadakandriga Village, மார்கெட் சென்டர் அருகில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சாலையை கடந்து சென்ற போது, அந்த நேரத்தில் TN 06 D 7551 என்ற பதிவு எண் கொண்ட காரின் ஓட்டுநர் காரை Sullurpet-ல் இருந்து சென்னை நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று காலமானவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், இந்த விபத்தில் காலமானவருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் பின்னர் 29.08.2016 அன்று இறந்துவிட்டார் என்றும், இந்த விபத்தினால் Chinnakannu என்பவர் காலமானதற்கு உரிய இழப்பீடு வழங்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டுமென குறிப்பிட்டு வாதிட்டார்.

ii. 2ம் எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர்கள் சொல்வது போல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், காலமானவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அந்த வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும், அவர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டுள்ளார் என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பிரைவேட் கார் பேக்கேஜ் பாலிசி எடுத்திருப்பதால் விபத்தில் காலமான நபருக்கு இழப்பீடு வழங்க இயலாது என்று குறிப்பிட்டு வாதிட்டார்.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:38 +0530

iii. இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதுரைகள் மற்றும் வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. 1ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், விபத்தில் கண்ணுற்ற சாட்சி ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு அவர்கள் மனு சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. மேலும் அதனை உறுதிபடுத்தும் வகையில் விபத்து நடைபெற்றது குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையினை பரிசீலனை செய்ததில் 20.03.2015 அன்று நடந்த விபத்து குறித்து புகார் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஆந்திரபிரதேசம், நெல்லூர் மாவட்டம், Tada காவல் நிலைய குற்ற எண். 56/2015 இ.த.ச பிரிவுகள் 337 ன் கீழ் 21.03.2015 அன்று 1ம் எதிர்மனுதாரரின் TN 06 D 7551 என்ற பதிவு எண் கொண்ட கார் ஓட்டுநருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அதேபோல், ம.சா.ஆ3 இறுதி அறிக்கை நகலில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பதற்காக இ.த.ச பிரிவு 338 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி ம.சா.1 மற்றும் ம.சா.2ன் சாட்சியமும் அதனை உறுதிபடுத்தும் வகையில் ம.சாஆ.1 முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும் ம.சா.ஆ3 குற்ற இறுதி அறிக்கை நகலினை காணும் போது இந்த விபத்திற்கு TN 06 D 7551 என்ற பதிவு எண் கொண்ட கார் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் காரணம் என்பதும், இந்த விபத்தில் Chinnakannu என்பவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும் திட்டவட்டமாக அறிய முடிகிறது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:42 +0530

ஆனால், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் சொல்வது போல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்று மறுப்பு தெரிவித்து இருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் வகையில் வாய் மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சங்கதிகளான 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை சம்பவ நாள், நேரம், இடத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானித்து வினா எண்1 ற்கு விடை காண்கிறது.

7. **<u>பிரச்சனை எண் 2க்கான தீர்வு</u>**

விபத்தானது 20.03.2015 அன்று 1ம் எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 06 D 7551 என்ற பதிவு எண் கொண்ட கார் ஓட்டுநரால் ஏற்பட்டது என்பது மேலே விவாதித்த வகையில் திட்டவட்டமாக தீர்மானித்துள்ள நிலையில், மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 06 D 7551 என்ற பதிவு எண் கொண்ட வாகனமானது 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அதன் காலவரையறையானது 02.12.2014 முதல் 01.12.2015 நள்ளிரவு வரை உள்ளது என்பது ம.சா.ஆ15ல் இருந்து அறிய முடிகிறது.

ஆனால் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில' 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பிரைவேட் கார் பாக்கேஜ் பாலிசி எடுத்திருப்பதால் விபத்தில் காலமான நபருக்கு மேற்கண்ட காப்பீடு செல்லதக்கதல்ல என்று வாதம் குறித்து ஆராய்கையில் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது ம.சா.ஆ15 காப்பீடு நகலை பரிசீலனை செய்ததில் அதில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் பதிவு எண் TN 06 D 7551 ஆனது, 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டு அந்த காப்பீடானது 02.12.2014 முதல் 01.12.2015 வரை நிலுவையில் உள்ளது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு தொகையாக Own damagesற்காக ரூ.13,760/-ம், liabilityற்காக TP premium ஆக ரூ.4259/-ம் பணம் செலுத்தியுள்ளார் என்று அறிய

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:46 +0530

முடிகிறது. அதனால் 1ம் எதிர்மனுதாரர் தன் வாகனத்திற்கு 3ம் தரப்பினருக்கான காப்பீடும் சேர்த்து எடுத்துள்ளர். இந்த வழக்கு விபத்தில் காலமான நபர் 1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டிற்கு 3ம் தரப்பினர் என்பதால் அவருக்கு இந்த காப்பீடு செல்லதக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

அதேபோல், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும், மேற்கண்ட வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டு உள்ளார் என்றும் குறிப்பிட்டு கூறியிருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் வகையில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைபடுத்தவில்லை.

எனவே, மேற்படி 1ஆம் எதிர்மனுதாரர் விபத்து வாகனத்தின் உரிமையாளர் என்ற வகையிலும், 2ஆம் எதிர்மனுதாரர் அதன் காப்பீட்டாளர் என்ற வகையிலும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவர். எனவே 2ம் எதிர்மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரது வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற வகையில், மேற்படி சாலை விபத்தில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டினை வழங்க பொறுப்பானவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

8. **<u>பிரச்சனை எண் 3க்கான தீர்வு</u>**

விபத்தில் காலமான நபர் விபத்து நடந்து 1 1/2 ஆண்டு கழித்து இறந்திருப்பதாக ம.சா.ஆ.10 இறப்பு சான்றிலிருந்து அறிய முடிகிறது. அதனால் அவருடைய வாரிசு தாரர்களான மனுதாரர்கள் இந்த மனுவை இறப்பிற்கான இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் விபத்தில் காலமான நபர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளாரா என்பது குறித்து ஆராய்கையில், விபத்தானது 20.03.2015 அன்று நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்த

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:50 +0530

சின்னகன்னு என்பவர் 21.03.2015 அன்று சௌந்தரபாண்டியன் Bone and Joint மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து 12 நாட்கள் சிகிச்சை பெற்று 01.04.2015 அன்று மருத்துமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்று ம.சா.ஆ4ல் இருந்து அறியமுடிகிறது. அதன் பின்னர் 03.04.2015 அன்று ராஜீவ் காந்தி அரசு மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்பது ம.சா.ஆ5ல் இருந்து தெரியவருகிறது. மேற்கண்ட இரண்டு ஆவணங்களிலும் காலமானவருக்கு விபத்தினால் இடது காலில் எலும்பு முறிவும் ஆல்கஹால் திரும்ப பெறுதல் நோய் குறியுடன் இடது பக்க தலைப்பகுதி சிராய்ப்பு காயமும், உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டிருப்பதாக குறிப்பு காணப்படுகிறது. அதற்கான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அரசு மருத்துமனையில் இருந்து 20.04.2015 அன்று காலமான நபர் விடுவிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட ம.சா.ஆ4 மற்றும் ம.சா.ஆ5ஐ தவிர மனுதாரர் தரப்பில் வேறு மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 20.04.2015க்கு பிறகு காலமான நபர் எடுத்துக் கொண்ட தொடர் சிகிச்சை ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதேபோல் காலமான நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காலமான நபரின் இறப்பிற்கான காரணம் குறித்து தெளிவுபடுத்தவில்லை. எனவே, மனுதாரர் தரப்பில் சரியான சாட்சி மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி காலமான நபர் விபத்தின் காரணமாக இறந்துள்ளார் என்பதை நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதனால் மனுதாரர்களுக்கு காலமான நபரின் இறப்பிற்கான இழப்பீடு வழங்க இயலாது என்றும், காயத்திற்கான இழப்பீடு மட்டும் வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

மனுதாரர் தரப்பில் காலமாவரின் குடும்ப உறுப்பினர் சான்றிதழ் ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ம.சா.ஆ.12ன் அடிப்படையில் மனுதாரர்கள் காலமானவரின்

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:54 +0530

வாரிசுதாரர்கள் என்பதால் அவர்கள் இவ்வழக்கின் இழப்பீட்டு தொகையை பெற தகுதி உடையவர்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மனுதாரர்கள் காலமான நபரின் காயத்திற்கான இழப்பீட்டு தொகை மட்டும் பெற இயலும் என்பதால் இது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற Divisional Manager Vs S.V.Mani(CDJ 2008 MHC 6209) என்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின் படி கீழ்க்கண்ட தலைப்புகளில் மட்டும் மனுதாரர்கள் இழப்பீடு பெற தகுதி உடையவர்கள் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. பிரச்சனை எண்4க்கான தீர்வு

மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை :-

மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகள்:-

மனுவில் மருத்துவம் மற்றும் சிகிச்சை தொடர்பான செலவினங்களுக்காக குறிப்பிட்டு ரூ.3,20,000/- இழப்பீடு கோரியுள்ளார். மனுதாரர் தரப்பில் மருத்துவ செலவுகளுக்கான மருத்தவ பில்கள் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ம.சா.ஆ9 யை பரிசீலனை செய்ததில் மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகளுக்கு ரூ.2,62,064/- இழப்பீடாக வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

II.போக்குவரத்து தொடர்பான இழப்பீடு:-

மனுவில் போக்குவரத்து செலவினத்திற்காக குறிப்பிட்டு ரூ.80,000/- கோரப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான எந்த ஒரு ஆவணமும் மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், காலமானவருக்கு எற்பட்ட காயங்கள் குறித்து பரிசீலிக்கையில் காலமானவர் மருத்துவமனைக்கு சென்று வந்ததற்காக போக்குவரத்திற்கு நிச்சயம் செலவு செய்திருக்கக்கூடும் என்பதால், அதனடிப்படையில் போக்குவரத்துத்

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:36:58 +0530

தொடர்பான செலவினங்களுக்காக மனுதாரர் ரூ.10,000/- இழப்பீடு பெறத்தக்கவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

III.கூடுதல் போஷாக்கிற்கான இழப்பீடு:-

மனுவில் கூடுதல் போஷாக்கிற்கான செலவினம் என்பதாக குறிப்பிட்டு ரூ.1,00,000/- கோரப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான எந்தவொரு ஆவணமும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் காலமானவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து பரிசீலிக்கையில் கூடுதல் போஷாக்கிற்காக கட்டாயம் மனுதாரர் செலவு செய்திருக்கக்கூடும் என்பதால் கூடுதல் போஷாக்கிற்கான செலவினங்களுக்காக மனுதாரர் ரூ.10,000/- பெறத்தக்கவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

IV.உதவியாளர் செலவின தொடர்பான இழப்பீடு:-

தீர்மானிக்கப்பட்ட சட்ட வரையறை அடிப்படைக் கொள்கையின்படி சாலை விபத்தினால் பாதிக்கப்பட்ட நபருக்கு அவரது குடும்ப உறுப்பினர்களே இலவசமாக அருகில் இருந்து பெருந்தன்மையோடு சேவை மேற்கொண்டபோதிலும் பாதிக்கப்பட்ட நபர் உதவியாளர் செலவினம் தொடர்பாக இழப்பீடு பெறத்தக்கவராவார். CDJ 1982 DHC 147 – Delhi Transport Corporation and Anr. Vs. Kumari Lalith என்ற முன் தீர்ப்பில் மாண்புமிகு டில்லி உயர்நீதிமன்றம். “there cannot be any deduction if domestic help is obtained from a family member”, எனக் குறிப்பிட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்கையில், மனுதாரர் தரப்பில் உதவியாளர் செலவினம் தொடர்பாக இழப்பீடு கோருதல் குறித்து எவ்விதமான சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தாதபோதிலும், காலமானவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை கொண்டு அவருக்கு ரூ.25,000/= இழப்பீடு பெறத்தக்கவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:37:02 +0530

V.வருவாய் இழப்பீடு

காலமானவர் விபத்து சமயத்தில் காய்கறி கடை வைத்து காய்கறி வியாபாரம் செய்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்ததாக ம.சா.1 தன் சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் அதற்கான எந்தவொரு ஆவணமும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. இருந்தபோதிலும், இறந்து போன நபர் ஏதோ ஒரு வேலை செய்து சம்பாதித்திருக்ககூடும் என்பதால் அவருடைய குறைந்தபட்ச வருமானமாக ரூ.10,000/- எடுத்துக்கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மருத்துவ ஆவணங்களின் படி காலமானவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சமார் 6மாத காலம் வரை வேலைக்கு செல்லாமல் ஓய்வில் இருந்திருக்கக்கூடும் என்பதால் அந்த காலகட்டத்திற்கான வருமான இழப்பீடாக ரூ.60,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

VI. இழப்பீடு குறித்த கணக்கீடு:-

மேற்கண்ட சாராம்சங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு கிடைக்கத்தக்க மொத்த இழப்பீடு ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படுகிறது.

வ.எண்.	பொருள்	தொகை
1.	மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகள்	ரூ.2,62,064/-
2.	போக்குவரத்து தொடர்பான இழப்பீடு	ரூ.10,000/-
3.	கூடுதல் போஷாக்கிற்கான இழப்பீடு	ரூ.10,000/-
4.	உதவியாளர் செலவின தொடர்பான இழப்பீடு	ரூ.25,000/-
5.	வருவாய் இழப்பீடு	ரூ.60,000/-
	மொத்த இழப்பீட்டுத் தொகை	**ரூ.3,67,064/-**

மேற்கண்ட விவாதங்களிலிருந்து மனுதாரருக்கு மொத்தம் ரூ.3,67,064/- என்பதை முழுமையாக **ரூ.3,67,100/-** இழப்பீட்டுத் தொகையாக கிடைக்கக்கூடியது என்று இந்தத் தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:37:06 +0530

10. முடிவில் இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கான மொத்த சரியான இழப்பீடாக **ரூ.3,67,100/-** வழங்க வேண்டும் என்பதாக இத்தீர்ப்பாயம் நிர்ணயித்து கீழ்க்கண்டவாறு உத்தரவிடுகிறது.

a) 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பிற்கு விபத்து இழப்பீட்டு தொகை கொடுக்க கடமைப்பட்டவர்களாக உள்ள நிலையில், விபத்து ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையில் மேற்படி இழப்பீட்டு தொகையினை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க பொறுப்பானவர் என தீர்மானித்துள்ளதால், இழப்பீடு தொகை **ரூ.3,67,100/-** மற்றும் அதற்கான பின் வட்டி மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும் காலம் வரை 7.5சதவீத ஆண்டு வட்டியுடன் மனு தள்ளுபடி ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்தை கழித்து கொண்டு 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மொத்த இழப்பீட்டுத் தொகையும் காலமானவரின் மக்களான மனுதாரர்களுக்கு சரிசமமாக கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

b) 2ம் எதிர்மனுதாரர், மேற்படி இழப்பீடுத் தொகையை வங்கி கணக்கு எண் Indian Bank, High Court Building Branch, A/c No.7103261207, IFSC Code No.IDIB000M157, MICR No.600019117ல் NEFT or RTGSன் கீழ் நேரடியாக இவ்வுத்தரவு பிறப்பித்த இரண்டு மாத காலத்திற்கு வைப்பீடு செய்யவும், மாண்புமிகு மதராஸ் உயர்நீதிமன்றம் CMA No.428/2016 dated 11.03.2016ல் பத்தி 11 (IX) ல் குறிப்பிட்டுள்ள உத்தரவின் படி அது குறித்த தகவலை இத்தீர்ப்பாயத்திற்கு உடனடியாக தெரிவிக்கவும், அவ்வாறு வைப்பீடு செய்த நடவடிக்கை குறித்த ஆவண நகலினை

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:37:10 +0530

மனுதாரருக்கோ அல்லது அவரது வழக்கறிஞருக்கோ நேரடியாக வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.

c) மனுதாரர்களின் இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டியை உடனடியாக மனுதாரர்களின் வங்கி கணக்கு எண்ணிற்கு நேரடியாக மாறுதல் செய்ய உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்களின் வங்கி கணக்கு எண் மற்றும் ஆதார் அட்டை விவரங்கள் :-

1ம் மனுதாரரின் பெயர் - C.Raja

வங்கி பெயம் மற்றும் கிளை	**வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code**	**ஆதார் அட்டை விவரம்**
State Bank of India, Tata District, Nellore	Ac No: 20086307896 IFSC : SBIN0012949	8760 6357 9656

2ம் மனுதாரரின் பெயர் - C.Selvam

வங்கி பெயம் மற்றும் கிளை	**வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code**	**ஆதார் அட்டை விவரம்**
Indian Bank, Kadambattur	Ac NO: 6269943060 IFSC : IDIB000K002	7244 9399 5270

3ம் மனுதாரரின் பெயர் - Puduru Lakshmi

வங்கி பெயம் மற்றும் கிளை	**வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code**	**ஆதார் அட்டை விவரம்**
Canara Bank, Tada	Ac NO: 34692210021690 IFSC : CNRB0013469	3771 7853 8836

d) இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.373/-. மனுதாரர்கள் செலுத்த வேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.3,043.50/-. இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் போக மீதமுள்ள ரூ.2,670.50/-ஐ நீதிமன்றக்கட்டணமாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

e) வழக்கறிஞருக்குரிய கட்டணமாக ரூ.10,342/- நிர்ணயிக்கப்படுகிறது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:37:15 +0530

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:37:18 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-

ம.சா.1 - திரு. ராஜா
ம.சா.2 - திரு. சீனிவாசன்

மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1	முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2	ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வழங்கிய ஓபினியன் பார்ம்
ம.சா.ஆ.3	இறுதி அறிக்கை நகல்
ம.சா.ஆ.4	டிஸ்சார்ஜ் சம்மரி
ம.சா.ஆ.5	டிஸ்சார்ஜ் சம்மரி
ம.சா.ஆ.6	வெளிநோயாளிக்கான சிகிச்சை அறிக்கை
ம.சா.ஆ.7	ஆய்வக அறிக்கை மற்றும் ஸ்கேன் அறிக்கை
ம.சா.ஆ.8	எக்ஸ்ரே
ம.சா.ஆ.9	மருத்துவ பில்கள்
ம.சா.ஆ.10	இறப்பு சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.11	காலமானவரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.12	குடும்ப உறுப்பினர் சான்றிதழ்
ம.சா.ஆ.13	வாகன பதிவு சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.14	1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல்

ம.சா.ஆ.15	வாகனத்தின் காப்பீடு நகல்
ம.சா.ஆ.16	மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள்
ம.சா.ஆ.17	மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்கள்

எதிர்மனுதாராகள் தரப்பு சாட்சிகள்:- இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:37:23 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மற்ற விவரங்கள்

மனு தாக்கல் செய்த தேதி	22.09.2022
தீர்ப்பு நாள்	24.09.2025
மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ. 15,00,000/-
தீரப்பாயம் வழங்கியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ. 3,67,100/-
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ.3,043.50/-
ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம்	ரூ. 373/-
மீதி செலுத்து வேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ.2,670.50/-

செலவு பட்டியல்

செலவு விவரங்கள்	**தொகை**
விருது தொகைக்கான முத்திரை வரி	ரூ.3,043.50/-
வக்காலத்து நாமா	ரூ. 5.00
சம்மன் பேட்டா தயாரித்தற்கான கட்டணம்	ரூ. 40.00
வழக்கறிஞர் கட்டணம்	ரூ.10,342/-
மொத்தம்	ரூ.13,430.50/-

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.09.24 17:37:27 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

Additional court fee paid, MPSR.No....................; dated................

(SPL-I, SSJ)